பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

18 07 2025 6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி பீஹாரில் இன்று 7 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

2. ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்குவதற்காக பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெபி. நட்டா தெரிவித்துள்ளார்.

3. வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக சாலை மற்றும் பாதாள சாக்கடை பணிகளை முடிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறையினரை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தயுள்ளார்.

4. அணு ஆயுதங்களை ஏந்திச் சென்று குறுகிய தொலைவில் உள்ள இலக்கைத் தாக்கவல்ல ப்ரித்வி-2 மற்றும் அக்னி-1 ஏவுகணைகள் வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டன.

5. ஹங்கேரியில் நடைபெற்று வரும் சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சுஜித் தங்கப் பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி பீஹாரில் இன்று 7 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

அம்மாநிலத்தின் கிழக்கு **Champram** மாவட்டத்தில் **Motihari**-யில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் ரயில்வே, நெடுஞ்சாலை, ஊரக வளர்ச்சி, மீன்வளம், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளைச் சார்ந்த வளர்ச்சிப் பணிகளையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

பிரதமரின் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின்கீழ் 160 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 12 ஆயிரம் வீடுகளின் சாவிகளையும் பயனாளிகளிடம் அவர் ஒப்படைக்க உள்ளார்.

காந்தி மைதானத்தில் நடைபெற உள்ள பொதுக்கூட்டம் ஒன்றிலும் அவர் உரையாற்ற உள்ளார்.

<<<<>>>>

ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்குவதற்காக பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், மத்திய அரசு நாடு முழுவதும் ஒரு லட்சத்து 27 ஆயிரம் சுகாதார நல மையங்களை ஏற்படுத்தி உள்ளது என்று கூறினார்.

இந்த மையங்கள் நகர்ப்புறங்களில் மட்டுமின்றி, தொலைதூரத்தில் உள்ள கிராமங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தொலைபேசி மூலம் மருத்துவ அலோசனை வழங்கும் வசதியும் இந்த மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு. ஜெபி. நட்டா கூறினார்.

<<<<>>>>

வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நடைபெற்று வரும் சாலை மற்றும் பாதாள சாக்கடை பணிகளை முடிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறைகளை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தயுள்ளார். இது தொடர்பாக தலைமைச் செயலகத்தில் நேற்று அவர் நகராட்சி நிர்வாகத்துறை உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

சாலைகளின் தரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும், மழைநீர் வடிகால்களின் பராமரிப்பு பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சாலைகளில் விதிகளுக்குப் புறம்பாக அமைக்கப்பட்டுள்ள வேகத் தடைகளை முறைப்படுத்த வேண்டும் என்றும், சாலை விளக்குகள் மற்றும் நடைபாதைகளை சீரமைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மக்களுக்கு சீரான குடிநீர் வினியோகம் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் முதலமைச்சா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மதுரை மாநகராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவமனை கட்டிடங்களை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் நேற்று திறந்து வைத்தார்.

இந்த கட்டிடங்கள் மாநிலத்தின் மருத்துவக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்த உதவும் என்று அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில்தான் மாநிலத்தில் புதிய மாவட்டங்கள் அதிகமாக உருவாக்கப்பட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

மயிலாடுதுறையில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மக்களின் கோரிக்கையை ஏற்று இம்மாவட்டம் கடந்த ஆட்சிக் காலத்தில்தான் ஏற்படுத்தப்பட்டது என்றும் தெரிவித்தார். வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக அரசு அதிகாரத்தில் இருந்து அகற்றப்படும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

மருதமலை முருகன் கோவிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக அமைக்கப்பட்டு வரும் மின்தூக்கி வசதி 2 மாதங்களுக்குள் பயன்பாட்டுக்கு வரும் என்று சட்டமன்ற மதிப்பீட்டுக்கு குழு தலைவர் திரு. காந்திராஜன் தெரிவித்துள்ளார்.

கோவையில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை நேற்று குழு உறுப்பினர்களுடன் ஆய்வு செய்த அவர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

மருதமலையில் ஆசியாவிலேயே மிகவும் உயரமான முருகன் சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருவதாகவும் திரு. காந்திராஜன் கூறினார்.

<<<<>>>>

அணு ஆயுதங்களை ஏந்திச் சென்று குறுகிய தொலைவில் உள்ள இலக்கைத் தாக்கவல்ல ப்ரித்வி-2 மற்றும் அக்னி-1 ஏவுகணைகள் வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டன.

ஒடிசா மாநிலம் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை மையத்தில் இருந்து நேற்று செலுத்தப்பட்ட இந்த ஏவுகணைகள், இலக்கைத் துல்லியமாக தாக்கியதாக பாதுகாப்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஏவுகணைகளின் அனைத்துப் பிரிவுகளும் திட்டமிட்டபடி செயல்பட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ப்ரித்வி-2 ஏவுகணை 500 கிலோ எடையுள்ள ஆயுதங்களை 350 கிலோ மீட்டர் தூரம் வரை ஏந்திச் சென்று இலக்கை தாக்கும் திறன் பெற்றுள்ளது.

அக்னி-1 ஏவுகணை ஆயிரம் கிலோ எடையுள்ள ஆயுதங்களை தாங்கிச் சென்று 700 முதல் 900 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள இலக்கை தாக்கும் திறன் படைத்தது என்று பாதுகாப்புத்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>

சேலம் மாவட்டம் நெய்க்காரப்பட்டி கிராமத்தில் நேற்று எருதாட்ட விழா நடைபெற்றது.

ஆடி மாதம் தொடங்கியதை முன்னிட்டு நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஏராளமான இளைஞர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை மாவட்டங்களின் ஒருசில பகுதிகளில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்திலும் இரவு முழுவதும் மிதமான மழை பெய்ததாகவும், திருத்தணியில் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் நேற்றிரவு முதல் விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தென்கொரியாவில் இருந்து வருகை தந்துள்ள சிறப்புப் பிரதிநிதிக் குழுவினர் புதுதில்லியில் நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினர்.

------------

பிரிட்டனுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்வதற்காக இம்மாதம் 25ஆம் தேதி அந்நாட்டின் பிரதமர் திரு. **Kier Starmer**-ஐ சந்தித்துப் பேச உள்ளதாக அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

------------

பல்கலைக்கழக மானியக் குழு நடத்தும் நெட் தேர்வு முடிவுகள் இம்மாதம் 22ஆம் தேதி வெளியாகும் என்று தேசிய தேர்வுகள் முகமை அறிவித்துள்ளது.

------------

பாதுகாப்பு படையினரின் தீவிர நடவடிக்கையால் சத்தீஸ்கட் மாநிலத்தில் நக்சல் தீவிரவாதம் பெருமளவு ஒழிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. விஷ்ணுதியோ சாய் கூறியுள்ளார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஹங்கேரியில் நடைபெற்று வரும் சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சுஜித் தங்கப் பதக்கம் வென்றார்.

ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவில் அவர் 5-1 என்ற புள்ளிக் கணக்கில் ஐரோப்பாவின் **Ali Rahimzade**-யை வென்றார்.

இப்போட்டியின் ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் ராகுல் வெண்கலப் பதக்கம் வென்றார்.

--------------

ஸ்விஸ் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் கதே -விஜய் சுந்தர் பிரசாந்த் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 7-6 என்ற செட் கணக்கில் ஜெர்மனியின் **Jakob – Mark Wallner** இணையை வென்றது.

-------------

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டி அக்டோபர் 27ஆம் தேதி தொடங்கி நவம்பர் 2ஆம் வரை நடைபெறும் என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நுங்கம்பாக்கம் விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டிகளில் சுமார் 100 வீரர்கள் பங்கேற்க உள்ளதாகவும், இதற்காக 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

**<<<<The End>>>>**